செய்தி வெளியீடு எண். 219 நாள்: 24.04.2017

## திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கத்தில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

~~~~~

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (24.04.2017) நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வருகை புரிந்த பொதுமக்கள் தங்களது தனிப்பட்ட குறைகளை நிவர்த்தி செய்யவும், உதவிகள் வழங்கிடவும் கோரி மனுக்களை அளித்தனர். இதில் நிலம் சம்பந்தமாக 67 மனுக்களும், சமூக பாதுகாப்பு திட்டம் தொடர்பாக 46 மனுக்களும், ஆதிதிராவிடர் , பிற்படுத்தப்பட்டோர் நலம் தொடர்பாக 3 மனுக்களும், வேலைவாய்ப்பு வேண்டி 25 மனுக்களும், சட்டம் மற்றும் ஒழுங்கு தொடர்பாக 12 மனுக்களும், ஊரக , நகர்புற வளர்ச்சி தொடர்பாக 10 மனுக்களும், கடனுதவி கேட்டு 3 மனுக்களும், அடிப்படை வசதியான போக்குவரத்து , சுகாதாரம் தொடர்பாக 5 மனுக்களும், வேளாண்மை, கால்நடைத்துறை , மீன்வளம் தொடர்பாக 17 மனுக்களும், கல்வி தொடர்பாக 5 மனுக்களும், பேரிடர்கள் தொடர்பாக 4 மனுக்களும், சான்றிதழ் வேண்டி 12 மனுக்களும், இதர துறையாக 59 மனுக்களும், என மொத்தம் 268 பொது மக்களின் கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

இம்மனுக்கள் மீது துரிதமாக நடவடிக்கை மேற்கொள்ளவும், பயனாளிகளுக்கு உதவிடும் வகையில் விரைந்து பரிசீலிக்க வேண்டும் என துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் 2015 - 2016 கல்வி ஆண்டில் 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநில அளவில் அதிக மதிப்பெண் பெற்ற ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிட மாணவ, மாணவியார் 4 நபர்களுக்கு சான்றிதல் மற்றும் பரிசு தொகைக்கான காசோலையினையும், முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தை சார்ந்த 5 நபர்களுக்கு ரூ.20,000 விதம் ஒரு இலட்சத்திற்க்கான திருமணம் மற்றும் கல்விக்கான உதவித் தொகையினையும், சுயதொழில் முனைவோருக்கு தாட்கோ மூலமாக கனரா வங்கி சார்பில் 4 லட்சத்திற்க்கான மானியத்துடன் கூடிய கடனுதவியையும் மற்றும் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத் துறை சார்பாக 12 நபர்களுக்கு மாற்றுத்திறனாளிகளுக்கான மாதந்தோறும் ரூ.1000/- பெரும் உதவித்தொகை ஆணையினையும் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.கே.முத்து, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) திரு. வி.முத்துசாமி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.எஸ்.ஜெயச்சந்திரன், முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் திருமதி.அமீரூன்னிஷா. மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் திருமதி.சு.சிவகாமி மற்றும் அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~